மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(எ) கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (1986) ஆ.இ.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :—

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்தச்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்."

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

(எ) கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஐ) கதர் கிராமத் தொழில் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

1986 மே 13]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திருமதி விஜயலக்ஷ்மி பழனிச்சாமி : துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஒ) இனாம் எடுத்து விடுதல் தொடர்பான (நடவடிக்கைகளை) செல் திறனாக்குதல்) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு இனாம் எடுத்துவிடுதல் தொடர்பான (நடவடிக்கைகளை செல்திறனாக்குதல்) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 23/1986)** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

இனாம் எடுத்துவிடுதல் தொடர்பான சட்டங்களின்கீழ் நடுவர் மன்றமாக செயல்பட திருச்சிராப்பள்ளி ஐந்தாவது கூடுதல் துணை நீதிபதியினுடைய நடவடிக்கைகளை செல்திறனாக்குவதற்காக சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. திருச்சிராப்பள்ளி கூடுதல் உதவி நீதிபதி 14—12—1976 முதல் 16—2—1977 வரையில் தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் ஒழித்தல் மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 26/1963 தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறிய இனாம்கள் ஒழித்தல் மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 30/1963) தமிழ்நாடு 1963 இனாம்கள் துணைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1963) ஆகியவற்றின் விதித்துறைகளின்கீழ் வழக்குகளை விசாரித்து முடிவு செய்வதை செல்திறனாக்க வகை செய்யும் சட்டம் பேரவைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் ஆணையை எதிர்நோக்கி இனாம் ஒழிப்புச் சட்டங்களில் அதாவது தமிழ்நாடு சட்டங்கள் 26/1963, 30/1963, 31/1963-ன் கீழ் வழக்குகளை விசாரித்து முடிவு செய்யுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிபதி ஐந்தாவது கூடுதல் துணை நீதிபதிக்கு 3—12—1976 நாளன்று உத்தரவிட்டதன் பேரில் திருச்சிராப்பள்ளி ஐந்தாவது உதவி கூடுதல் நீதிபதி 14—12—1976 முதல் 16—2—1977 வரையிலான கால

**1986 ஆம் ஆண்டு சனவரி 29—ஆம் தேதியிடப்பட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

128–121—13